சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 06.11.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 57/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-6 |
| சாட்சியின் பெயர் | : | செந்தில் |
| தந்தை பெயர் | : | திருஞானசம்மந்தம் |
| கிராமம் | : | கடுவங்குடி |
| தாலுக்கா | : | நன்னிலம் |
| தொழில் | : | விவசாயம் |
| வயது | : | 59 |

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 06 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1,4,6 எதிரிகள் ஆஜர். 3 எதிரி வேறு வழக்கில் சிறையில் உள்ளார். தற்போது PT Warrant மூலம் ஆஜர் படுத்தப்பட்டுள்ளார். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். நான் இந்து பிள்ளை சமூகத்தை சேர்ந்தவர் ஆவேன். கடுவங்குடியை சேர்ந்த தங்கவேல் மகன் சாமிநாதன் என்பவரை எனக்கு

தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் இந்த சாட்சி குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்பது போல் இந்த சாட்சியிடம் கேள்விகள் கேட்க அனுமதிக்கவேண்டுமென அரசு தரப்பு வழக்கறிஞர் வாய்மொழியாக கேட்டுகொண்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.)

அரசு தரப்பு தொடர் விசாரணை

கடந்த 10.07.2011 ஆம் தேதி மாலை 6.30 மணியளவில் நான் வசந்த மாளிகை திருமண மண்டபத்தில் என் நண்பர் சுரேஷ் என்பவரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் இருந்தபோது பக்கிரிசாமி தம்பி சாமிநாதன் கொலை செய்யப்பட்டு கிடந்ததாக நான் கேள்விப்பட்டு நான் போய் பார்த்தபோது சாமிநாதன் இரத்த காயத்துடன் கிடந்தார் என்றும், தரையில் இரத்தம் உறைந்து கிடந்தது என்றும், இது சம்மந்தமாக போலீசார் 11.07.2021 ஆம் தேதி என்னை விசாரணை செய்தார்கள் என்றும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிகளை காப்பாற்றும் நோக்கோடு நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளித்தேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை: இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M Digitally signed by VADIVEL M Date: 2025.11.06 16:56:35 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.